Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 278

வியாழக்கிழமை 31 ஓகஸ்ட் 2023

ஆவணி 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## சர்வதேச விசாரணையே நீதியைப் பெற்றுத்தரும்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

வவுனியா, ஓக.31
காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய உண்மையை சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துவதன் ஊடாகவே வெளிப்படுத்த முடியும். காணாமல் ஆக்கப்பட்ட 10 பேர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை அதிகாரிகள் கடந்தவாரம் எமக்கு அறிவித்துள்ளனர். ஆனால் அவர்களின் அடையாளம் பற்றிய தகவல்கள் »11


## உறவுகளை வெளிப்படுத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஓக.31
காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான நேற்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. »11

### வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

# மதப்பிரச்சினைகளை தீர்க்க சர்வ மதத்தலைவர்கள் குழு!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



**கொழும்பு, ஓகஸ்ட் 31**
**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மத ரீதியான பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக மாகாண மட்டத்தில் மதத் தலைவர்கள் தலைமையிலான குழு அமைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.** »11



### சந்நிதியான் தேரில்

## பக்தகோடிகளும் அதிகம் திருட்டு ‘கேடிகளும்’ அதிகம்!

### 25 பவுண் நகை அபேஸ்

யாழ்ப்பாணம், ஓக.31
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் »11

## தேருக்குச் சென்றோரின் வீடு உடைத்து நகை களவு

யாழ்ப்பாணம், ஓக.31
செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழாவுக்குச் சென்ற சமயம் வீடு உடைக்கப்பட்டு பணம், நகை என்பன »10

## தீர்வுக்கான அழுத்தங்களை அதிகரிக்கவேண்டும் ஐ.நா.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.31
தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. »10



## குறிகாட்டுவானில் வாகனங்கள் பயணிக்கத் தடை

யாழ்ப்பாணம், ஓக.31
குறிகாட்டுவான் இறங்குதுறையில் கனரக வாகனங்கள் பயணிப்பது ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. »10

### கல்வியங்காட்டில் சிறுமி உயிரிழப்பு

# சாவுக்கு பின்னான நடவடிக்கைகள் உரியவகையில் இடம்பெறவில்லை!

### கசிந்தது விசாரணைக் குழுவின் அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக.31
கல்வியங்காட்டில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்ட 16 வயதுச் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்த »11

## ‘அமெரிக்கா உடனிருக்கும்’

கொழும்பு, ஓக.31
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் அமெரிக்கா எப்போதும் இணைந்திருக்கும் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.
நேற்று சர்வதேச காணாமல் ஆக்கப் »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவின் தென்துருவத்தில் ஒட்சிசன் மற்றும் கந்தகம்

புதுடில்லி, ஒக. 31

நிலவின் தென்துருவத்தில் ஒட்சிசன் மற்றும் கந்தகம் என்பன உள்ளன. இந்த இயற்கை வளங்கள் தென்துருவத்தில் நிறைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.




நிலவின் தென்துருவத்தில் ஆய்வு நடத்துவதற்காக சந்திராயன் என்ற விண்கலத்தை வெற்றிகரமாகத் தரையிறக்கியுள்ளது இந்தியா. இந்த விண்கலத்தில் இருந்து வெளிவந்த 'பிரக்யான்' ரோவர் நிலவின் பல பகுதிகளுக்கும் நகர்ந்து சென்று பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. பிரத்தியேகமாக இணைக்கப்பட்டுள்ள கருவியின் உதவியுடன் நிலவில் துளையிட்டு அது தொடர்பான நுண் தகவல்களை பூமிக்கு அனுப்பி வருகின்றது. இதுவரை அனுப்பப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிலவில் ஒட்சிசன் மற்றும் கந்தகம் இருப்பதை இஸ்ரோ உறுதிப்படுத்தியுள்ளது. இந்தக் கண்டுபிடிப்புகள் நிலவில் தண்ணீர் ஆதாரங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளை அதிகரித்துள்ளது. 1960களின் பிற்பகுதியில் நிலவில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளைப் பரிசோதித்த அமெரிக்கா, நிலவில் தண்ணீர் இல்லை என்று அறிவித்தது. எனினும் 2000களின் பிற்பகுதியில் நிலவில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை உச்சக்கட்ட நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நாஸா மறுஆய்வுக்கு உட்படுத்தியது. இதில், மாதிரித் துகள்களில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் தென்படுகின்றது என்று நாஸா தெரிவித்தது. இதைத் தொடர்ந்து நிலவு தொடர்பான ஆய்வுப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## போயா தினத்தில் சாராயம் விற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 31

போயாதினமான நேற்று சாராயம் விற்ற ஒருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப்பிரிவுக்குக்கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குருநகரைச்சேர்ந்த 42 வயதுடைய நபரே 25 கால் போத்தல் சாராயப் போத்தல்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-ரி3-26)

# மூத்த பிரஜைகளுக்கு அரசு வரிச்சலுகை

**கொழும்பு, ஒக. 31**

**மூத்த பிரஜைகளின் வட்டி மற்றும் வரி வருமானத்தின்மீது விதிக்கப்பட்ட 5 வீத வரியை மீளச் செலுத்துவதற்கும் வரிச் சலுகை வழங்கவும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் மதிப்பீட்டு அதிகாரிகள் சங்கத்தின் ஆண்டு விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மூத்த பிரஜைகளுக்கு மாத்திரமன்றி ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் ரூபாவுக்கு மேல் வட்டி வருமானம் பெறுபவர்களுக்கு 5 வீத வரி அறவீடு கடந்த ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில் மாதம் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறும் மூத்த பிரஜைகளிடம் அறவிடப்பட்ட வரியை மீளளிக்குமாறு பல்வேறு தரப்பும் கோரிக்கை முன்வைத்தது.

அந்தவகையில் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உள்நாட்டு வருமானவரி திணைக்களத்துடன், பேச்சு நடத்தி அறவிடப்பட்ட 5 வீத வரியை மீளச் செலுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதிக்குப் பின்னர் அதனை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்மூலம் அவர்களுக்கு நிவாரணமும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது- என்றார். (ச-இ)

## சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்கவில்லை

*வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு, ஒக. 31

சர்ச்சைக்குரிய சீன ஆய்வுக்கப்பல் 'ஷியான் - 6' இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் தரித்துநின்று ஆய்வுகளை மேற்கொள்வதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. இந்த அறிவிப்புக்கு இந்தியா கடும் அதிருப்தி தெரிவித்தது டன், இதற்கெதிராக தூதரக ரீதியிலான நடவடிக்கைகளையும் இந்தியா ஆரம்பித்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே சர்ச்சைக்குரிய அந்தக் கப்பலின் ஆய்வுப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ம-6)

## வாகனங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி

வாகன இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டவிரோதமான முறையில் வாகனங்கள் நாட்டுக்குள் கடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாகன இறக்குமதியாளர்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் பலர் இணைந்து இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

சுமார் 5 ஆயிரம் வாகனங்கள் இவ்வாறு சட்டவிரோதமாக நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 200 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகியுள்ளதாகவும் ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (ஒ-இ)



## காணாமலாக்கப்பட்டோர் தினம்: யாழில் நேற்று முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக.31

யாழ். மாவட்ட காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தில் சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் நேற்றுப் புதன்கிழமை காலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளை நினைவுகூர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டது. தொடர்ச்சியாக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் மற்றும் அலுவலக அதிகாரிகளால் கருத்துகள் பகிரப்பட்டன.

இதில் காணாமலாக்கப்பட்ட உறவுகள் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் அலுவலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-ரி2-125)

# தெற்காசியாவின் உக்ரைனாக இலங்கை விரைவில் மாறும்!

*சரித ஹேரத் எம்.பி. சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக. 31

தவறான வெளிவிவகார கொள்கை மற்றும் தவறான இராஜதந்திர உறவுகள் காரணமாக எதிர்காலத்தில் இலங்கை தெற்காசியாவின் உக்ரைனாக மாறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரில் இலங்கை ஒரு சுதந்திர நாடாக இன்றி இந்திய நாடாக மாறத் தயாராகி வருகின்றது. இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான நட்புறவு மற்றும் இராஜதந்திர உறவுகளால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றபோதும், இந்தியாவுடனான உறவை தற்போதைய அரசாங்கம் நிர்வகிக்கும் முறை தொடர்பில் கேள்விக்குரியதாகவுள்ளது. அண்மையில் இந்தியா சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கோ அல்லது மக்களுக்கோ அறிவிக்கவில்லை.

தற்போதைய அரசாங்கத்திடம் பொருளாதார வேலைத்திட்டம் இல்லை. ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டங்கள் இப்போது காலாவதியாகிவிட்டன. இந்த நிலையில், நாட்டுக்கு புதிய அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகள் தேவை. குறித்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் கலந்துரையாடி ஒரு பொது மேடையை உருவாக்கி இந்த அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்குத் தேவையான அனைத்து வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்களுக்கு ஒரு சோதனை வந்தால் தெய்வத் திட்டப் போய் முறையிடலாம். ஆனால் அந்தத் தெய்வத்துக்கே சோதனை வந்தால்? கிட்டத்தட்ட அதைமாதிரி ஒரு சம்பவம் இஞ்ச நடந்தது கனபேருக்குத் தெரியாது. உந்த தொல்லியல் திணைக்களம், இந்தவருடம் மாசி மாதம் விட்ட ஒரு வர்த்தமானியை இப்பதான் எங்கட ஆக்கள் வாசிச்சு, யாழ்ப்பாணத்தில நாலைஞ்சு இடங்களை தொல்லியல் சின்னங்களாக அறிவிச்சிருக்கிற விசயத்தைக் கண்டுபிடிச்சவை. அதிலை பறாளாய் முருகன் கோயிலில இருக்கிற அரசமரம் சங்கமித்தை கொண்டந்து வச்சதெண்டு அந்த வர்த்தமானியில இருந்ததால், மற்ற இடங்களை விட்டிட்டு அரசமரத்துக்காக எல்லாரும் குரல் குடுத்தவை. ஆனால் இந்தச் சத்தம் சந்தடியில நாங்கள் மறந்துபோன, தொல்லியல் சின்னமா அறிவிச்ச மிச்ச இடங்களில ஒண்டுதான், இளவாலையில உள்ள 'ஒரு சேர்ச்'.

இதுவொண்டும் பொதுவான, எல்லாரும் கும்பிடுற 'சேர்ச்' இல்லை. ஒரு தனிப்பட்ட குடும்பத்துக்குச் சொந்தமான, அவையின்ர சொந்தக் காணியில கட்டுப்பட்ட 'சேர்ச்'. இந்தியாவில இருந்தெல்லாம் மரங்கள், சாமான்கள் கொண்டுவந்துதான் அதைக் கட்டியிருக்கினம். சண்டைக்காலத்தில அங்கையிருந்தவையெல்லாம் இடம்பெயர்ந்து போட்டினம். அதால பராமரிப்பும் இல்லாமல், குண்டுகளும் பட்டு சேதமடைஞ்சு கிடந்த சேர்ச்சை, நாலு வருசத்துக்கு முதல் அந்த சேர்ச் கட்டின பரம்பரையைச் சேர்ந்த ஆக்களெல்லாம் காசுபோட்டு திருத்த வெளிக்கிட்டிருக்கினம். திருத்தவேலையெல்லாம் முடிஞ்சு போன வருசம் பெரிசா திருவிழாவும் செய்தவை.

இப்பிடி திருத்தவேலை செய்து, திருவிழாக் கொண்டாடினது ஆற்றையோ கண்ணில உறுத்தியிருக்கோனும், உடனையே அவை 'ஒரு பழையகாலத் தேவாலயம் இளவாலையில இருக்கு. அதை தொல்லியல் சின்னமா அறிவியுங்கோ' எண்டு தொல்லியல் திணைக்களத்துக்கு கடிதம் போட்டிருக்கினம். இப்பிடிக் கடிதம் போனால் தொல்லியல் திணைக்களம், அந்த சேர்ச் ஒரு தனிப்பட்ட ஆக்களின்ர காணிக்குள்ள இருக்கிறதால அந்த சேர்ச்காரருக்கு இதைப்பற்றி அறிவிச்சு, உண்மையாவே அது 100 வருசத்துக்கு முந்தின தேவாலயமோ எண்டு உறுதிப்படுத்துற ஆய்வைச் செய்து, அதுக்குப் பிறகு 'சேர்ச்காரரின்ரை' அனுமதியையும் எடுத்துத்தான் அதை தொல்லியல் சின்னமா அறிவிச்சிருக்கோனும்.

ஆனால் பறாளாய் முருகன் கோயில் அரசமரம் மாதிரி, இந்த'சேர்ச்'சையும் சொல்லாமல் கொள்ளாமல், 'ஏசி' ரூமுக்க இருந்தபடியே தொல்லியல் திணைக்களம் மரபுரிமைச் சின்னமா வர்த்தமானியிலையும் அறிவிச்சுப் போட்டுது.

அதெல்லாம் சரி, இதுக்கும் 'எங்களுக்கு ஒரு சோதனை வந்தால் தெய்வத்திட்ட போய் முறையிடலாம். ஆனால் அந்தத் தெய்வத்துக்கே சோதனை வந்தால் ?' எண்டு தொடக்கத்தில சொன்னதுக்கும் என்ன சம்பந்தமெண்டு நீங்கள் தலையைப் பிய்ப்பீங்கள். அந்த இளவாலைச் சேர்ச் இருக்கிற காணி வேற ஆற்றை காணியுமில்லை,எங்கட வடக்கு மாகாணத்தின்ர இப்பத்தை ஆளுநர் திருமதி சாள்ஸின்ர காணி தான். சேர்ச்சும் அவையின்ர பரம்பரைக்குச் சொந்தமான தனிப்பட்ட 'சேர்ச்' தான். ஒரு ஆளுநரின்ர சேர்ச்சையே இப்பிடி சொல்லாமல், கொள்ளாமல் மரபுரிமைச் சின்னமா அறிவிக்கினம் என்டால், சாதாரண ஆக்களின்ர நிலையை யோசிச்சுப் பாருங்கோவன்.



– பட்சி

padsi@uthayan.com

## சொற்பொழிவு

அச்சுவேலி, ஓக. 31

அச்சுவேலி தோப்பு அருள்மிகு போதிராம்பிட்டி பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நேற்றைய தினம் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 7 மணிக்கு ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-ரி3)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக. 31

புத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை மகா கும்பாபிஷேக பெருவிழாவின் கர்மாரம்பம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம்பெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 6.09 மணி தொடக்கம் 7.31 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (ஒ-ரி3-27)

## தோழர் விஜே டயஸ் நினைவுகூரல் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 31

சோஷலிஸ சமத்துவக் கட்சியின் முன்னோடியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னாள் பொதுச் செயலாளருமான தோழர் விஜே டயஸை நினைவுகூரும் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)



## நல்லூரான் சிறப்பம்சம்

### சிங்காரம் காட்டி ஏனோ சிரிக்கின்றாய்

ஆலோலம் பாடும் வள்ளி
அகத்தினை வென்றவா!
அழகு நல்லைக் கோவிலிலே
அலங்காரம் தந்தவா!
கோலாகலம் காணக்
கொடியேற்றம் கண்டவா!
குடியிருக்கும் கோவிலிலே கோணாகி நின்றவா!
வேல் கொண்டு வினை தீர்க்க
வீதிவலம் வந்தவா!
விருப்புடனே வேல் விழியாரிருவருடன்
இணைந்தவா!
சீலமுயர் வாழ்வு பெறவென சிந்தையில் நிறைந்தவா!
சிங்காரம் காட்டி ஏனோ சிரிக்கின்றாய் நல்லூரா!

**தேவி.கணேஸ்**, ஆனைப்பந்தி

### மஞ்சுதனே உமையாள் திருமகனே

நஞ்சுண்ட கண்டப் பெருமானின் திருமகனே
வெஞ்சமரில் சூரபத்மனை வென்ற வெற்றி வேலவனே
குஞ்சரி மணவாளனே குறவள்ளிக் கந்தனே
அஞ்சேல் என அபயமளித்தெம் நெஞ்சத்தில் நிறைந்தவனே
மஞ்சுதனே உமையாள் திருமகனே
நல்லைக் கந்தனே நல் அருளைத் தந்திடுவாய்

**சி.மகாலட்சுமி**, கொக்குவில்

## தெய்வீகக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தெய்வீக திருக்கூட்டத் தொடர் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நல்லூர் பாணாங்குளம் நாச்சிமார் ஆலய பிரதமகுரு சோ.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கரவெட்டிப் பிரதேச செயலர் தயாரூபன் கலந்துகொள்ளவுள்ளார்.

'தொண்டரின் பெருமை' மற்றும் 'அறநெறி கல்வியின் முக்கியத்துவம்' எனும் தலைப்புகளில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளதோடு பல்வேறு இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ-ரி2)

## 3 கோடி ரூபா பெறுமதியான ஐஸுடன் மன்னார்வாசி கைது

மன்னார், ஓக. 31

மன்னார் - உயிலங்குளம் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்புச் சோதனையில் இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து 3 கோடி ரூபா பெறுமதியான 3.39 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

மன்னாரைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேகநபரே கைதானார். சந்தேகநபரை மேலதிக விசாரணைக்குட்படுத்துவதற்காக மன்னார் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என மன்னார் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்திகள் தனித்துவம் பெற முயற்சியாளர்சபை வேண்டும்

## யாழ்.மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக. 31**
**உள்ளூர் உற்பத்திகள் சர்வதேசதரத்தில் தனித்துவம் பெறுவதற்கு வடக்கு மாகாண சிறுதொழில் முயற்சியாளர்களுக்கென சபை ஒன்று அமைக்கப்பட்டு அதனை அங்கீகாரம் பெறப்பட்ட ஒரு நிறுவனமாக மாற்றவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள விற்பனைக் கண்காட்சியில் பிரதம அதிதியாகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மூன்று மாதங்களாக பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பு யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் ஞாயிற்றுக்கிழமை போனால் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை வாங்கமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து முயற்சியாளர்களுக்கிடையிலான ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளனர். அந்தச் செயற்பாடு ஆரம்பகட்டத்தில் தற்போது இருக்கிறது.

எதிர்காலத்திலே பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டு முயற்சியாளர்கள் தங்களுக்கு இடையே சிறந்த ஆரோக்கியமான கட்டமைப்பை ஏற்படுத்தி தொழில் முயற்சிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

நாங்கள் தேசிய ரீதியாக, சர்வதேச ரீதியாக போட்டிச் சந்தைக்கு ஏற்ப இன்னும் பல முன்னேற்றங்களைக் காணவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அந்தத் திணைக்களத்தில் இருக்கக்கூடிய ஆய்வுப் பிரிவுகள் அவற்றோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைப் பிரிவு, உயிரியல் துறை பிரிவு மற்றும் விவசாயப் பிரிவு போன்றவை உற்பத்தியாளர்களுடைய நிலையங்களைத் தங்களின் வெளிக்களப் பயிற்சிக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

உற்பத்தியாளர்களை முன்னேற்றுவதற்கான வியூகங்களையும் வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

எங்களுடைய தொழிலை மேற்கொள்ளுகின்றபோது அந்தத் தொழிலுக்கான அங்கீகாரம், தனித்துவம் காணப்படவேண்டும், அந்தவகையில் உற்பத்தி முயற்சியாளர்களின் அந்தத் துறைசார்ந்த அனுபவம், அறிவு, ஆற்றல் என்பவை சான்றுப்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற சிறுதொழில் முயற்சியாளர்களுக்கென சபை ஒன்று அமைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனமாக அது மாற்றப்படவேண்டும்.

இன்றைக்கு இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தொடர்பு கப்பல் சேவை, விமான சேவையூடாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் விரும்புகின்ற அளவுக்கு எங்களுடைய உற்பத்திகளைத் தரமுயர்த்தவேண்டும். நல்ல சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்- என்றார். (ச-27)



# தொல்லியலை அழிப்பவர்கள் தமிழ் அரசியல்வாதிகள்தான்!

## மேர்வின் சில்வா கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக. 31

வடக்கு- கிழக்கில் தொல்லியல் அடையாளங்கள் அழிக்கப்படுவதன் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகளே உள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு- கிழக்கில் தொல்லியல் அடையாளங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. புலம்பெயரிகளின் ஆதரவுடன் புலி ஆதரவாளர்கள் இதனைச் செய்து வருகின்றனர். அப்பாவித் தமிழ் மக்கள் இதன் பின்னணியில் இல்லை. மாறாகத் தமிழ்த் தலைவர்களே இதன் பின்னணியில் செயற்படுகின்றனர். இந்த நாட்டில் தற்போது வாழ்வதற்காகப் போராடவேண்டியுள்ளது. தண்ணீர்கூட இல்லை. ஆனால், அரசியல் செய்கின்றனர். ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவர முற்படுகின்றனர். நாமலை முன்னிலைப்படுத்துகின்றனர். இது தவறு. ராஜபக்சக்களை மக்கள் விரட்டியடிக்க வேண்டும். நானும் ராஜபக்சக்களுக்கு சோரம் போனவன்.

ஆனால், தாஜுதீனுக்கு செய்ததுபோல் எனது மகனுக்கும் செய்ய முற்பட்டனர். ஆனால், அவர் தப்பிவிட்டார். எனக்கு வேட்புமனு வழங்கவில்லை. இலங்கை ஒளிபரப்புக் கூட்டுதாபனத்துக்கு ராஜபக்சக்களே என்னை அனுப்பிவைத்தனர். தாக்குதல் நடத்த உத்தரவிட்டனர்- என்றார். (ம-44)

# கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூடு; பொலிஸாரும் கைது

கொழும்பு, ஓக. 31

கதிர்காமம் - கந்தசுரிந்துகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டின்முன் காத்திருந்த இருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

மேலும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக்கூறப்படும்ரி-56 ரக தானியங்கி துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தனிப்பட்ட தகராறு காரணமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது எனப் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி2)

# ஜே.வி.பி.யினது ஊழல்கள் நீதிமன்றில் பகிரங்கமாகும்

## சாகர காரியவசம் மிரட்டல்

கொழும்பு, ஓக. 31

ஜே.வி.பி.யின் ஊழல்களை நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவோம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

கடந்த 18ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்டத் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை முன்னிலைப்படுத்தி தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திய தாகக் குறிப்பிட்டுக்கொண்டு அநுரகுமார திஸாநாயக்க 10 பில்லியன் ரூபா கோரி கடிதம் அனுப்பியுள்ளார். எனக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் அநுரகுமார திஸாநாயக்க வழக்குத் தாக்கல் செய்யலாம். அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்தால், ஜே.வி.பி. தொடர்பில் நீதிமன்றத்தில் பல விடயங்களை நாங்களும் வெளிப்படுத்துவோம்.

அநுரகுமார திஸாநாயக்க விவசாயத் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது ஆயிரம் குளங்களை அபிவிருத்தி செய்ய திறைசேரி ஊடாக நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஆகவே அந்த நிதிக்கு என்ன நேர்ந்தது? என்பதை ஜே.வி.பி.யினர் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்- என்றார். (ம)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். நிம்மதி பெறுவீர்கள். ஆதாயம் கிடைக்கக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். ஆதாயம் பெறும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காகப் பாடுபட வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் பிறக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். முயற்சிக்கு ஆதரவு தருவார். செலவுகள் அதிகரிப்பதால் கடன் வாங்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரின் பங்காளிகளாவோம்


நேற்று சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம். வழமைபோல ஈழத்திலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், போரின் இறுதிநாள்களில் தங்களின் பிள்ளைகள், கணவன், தந்தை, சகோதரர்கள் என்போர் காணாமல் ஆக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களின் போராட்டம் மிக நெடியது. கண்ணீர்மழையால்தான் அவர்களின் ஒவ்வொருநாளும் கரைந்துகொண்டிருக்கிறது. இரண்டாயிரம் நாள்களைத் தாண்டியும், தங்களின் உறவுகளின் கதியை அறியாமல் அசையோம் என்ற ஓர்மத்தோடு போராடிக் கொண்டேயிருக்கிறார்கள். இலங்கையின் வரலாற்றிலேயே மிகநீண்டகாலமாக இடம் பெற்ற, இடம்பெறுகின்ற போராட்டமும் இதுவாகத்தான் இருக்கும்.

உலகிலேயே மிகநீண்டகாலம் நீடித்த ஜனநாயகப் போராட்டம் இந்தியாவின் இரோம் ஷர்மிளாவின் சுமார் 16 வருடங்களாக நீடித்த உண்ணாவிரதப்போராட்டமே. மணிப்பூர் மாநிலத்தில் இந்தியப்படைகளின் அராஜகம் எல்லைமீறியது. அதற்குக் காரணமான ஆயுதப்படைகள் சட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கையோடு, 2000ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பித்த இரோம் ஷர்மிளாவின் உண்ணா நோன்பு, 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி முடிவுக்கு வந்தது. உலகத்தின் கவனத்தை ஈர்த்த இந்த நெடிய ஜனநாயகப் போராட்டத்தை இந்தியா மட்டும் கண்டுகொள்ளவேயில்லை. அதனால் 16 வருடம் போராடி களைத்துப் போன ஷர்மிளா, தன்னுடைய கோரிக்கைகள் நிறைவேறாமலேயே உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஏறக்குறைய இரோம் ஷர்மிளாவின் போராட்டத்தைப் போலவே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டமும் அதிகாரபீடத்தால் கண்டுகொள்ளப்படாமலேயே இருக்கின்றது, அதுகூட பரவாயில்லை. ஆனால், மழைக்குள்ளும், வெயிலுக்குள்ளும் தம் உறவுகள் போராடுவதைத் தமிழ் மக்கள்கூட பொருட்படுத்தாமலிருப்பதுதான் பெருந்துயரம்.

உயிர்பலியை விடவும் காணாமல் ஆக்கப்படுதல்தான் மிகப்பெரிய வலியை உண்டுபண்ணும். ஏனெனில் ஒருவரின் சாவை உறுதிப்படுத்திவிட்டால், இனி அவர் திரும்பி வரப்போவதில்லை என்றநிலைக்கு மனதைத் திடப்படுத்தி, வேதனை இருந்தாலும்கூட, மெல்ல மெல்ல இயல்புக்குத் திரும்பக்கூடியதாக இருக்கும். ஆனால், காணாமல் ஆக்கப்பட்டாலோ, அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? சித்திரவதைக்கு உட்படுத்தப் படுகிறார்களா? எப்போது திரும்பி வருவார்கள்? அவர்கள் திரும்பி வரும்போது காண்பதற்கு உயிரோடு நாம் இருப்போமா? என்ற ஏக்கங்கள் நிதமும் அவர்களை மலைப்பாம்புபோல விழுங்கிக்கொண்டே இருக்கின்றன. அதனால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உயிரிருந்தும் சடலங்கள் போலவே தான் தம் வாழ்வை ஒவ்வொரு கணமும் உணர்கிறார்கள். சாவைவிடவும் பெரும் வலியல்லவா இது. போர்மூலம் இனவழிப்பை நடத்தி, உறவுகள் கதறக்கதற அவர்களின் கண்முன்னே இளைஞர், யுவதிகளை இழுத்துச் சென்று காணாமலாக்கிய பேரின அரசாங்கத்துக்கு அந்த வலி தெரியப்போவதில்லைத்தான். ஆனால், இந்தப் பெருந்துயரின் சாட்சியாக நின்ற சகமனிதர்களான நாம்கூட, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் வலிகளையும், அதன் விளைவாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நாள்களைத் தாண்டி தாயகமெங்கும் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கும் ஜனநாயகப் போராட்டங்களையும் கண்டு கொள்ளாதிருப்பது அதைவிட அதிகவலியை, பாதிக்கப்பட்டோருக்கு ஏற்படுத்தும். இதனை ஏன் நாம் உணர்வதில்லை. கண்ணீரைத் துடைக்கும் வழி தெரியாவிட்டாலும், அவர்களின் மன அவலங்களைக் கேட்டு ஆறுதல் சொல்வதுகூட, பெருவலியை அனுபவிப்பவர்களுக்கு ஒளடதம் தான். இனியாவது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கண்ணீரின் பங்காளிகளாவோம்.

**நாளொரு நல்வார்த்தை**

எதுவும் தாமதமாகி விடவில்லை
இந்த இடத்தில் ஆரம்பித்தால்
கூட இன்னும் எவ்வளவோ
உயரங்களுக்கு போய்விட முடியும்.
— வண்ணதாசன் —



# காணாமற்போனவர்களின் துன்பம் தொடர்கதையே!

## செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை

**கொழும்பு, ஓக. 31**

**காணாமற்போனவர்கள் தொடர்பில் நிச்சயமற்றதன்மை காணப்படுவதன் காரணமாக இலங்கை முழுவதுமுள்ள அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த பல்லாயிரம் மக்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அந்த அமைப்பு இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

காணாமற்போனவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? அல்லது இறந்துவிட்டார்களா? என்பது தொடர்பில் தெளிவற்ற நிலையில் வாழும் குடும்பங்களுக்கு வேதனையும் நிச்சயமற்ற தன்மையும் தற்போது தோன்றியுள்ளன.

காணாமற்போனவர்களின் குடும்பங்கள், அவர்களின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது. காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது? என்பதனை அறிய மக்களுக்கு உரிமை உண்டு. காணாமற்போனவர்களின் நிலை மற்றும் இருப்பிடம் குறித்து கண்டறியும் முயற்சிகளுக்கு தகவல்கள் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர் - என்றுள்ளது. (ம)

# மே 9 வன்முறை தொடர்பில் புதிய விசாரணை ஆரம்பம்!

கடந்த வருடம் மே மாதம் 9ஆம் திகதியன்று நாட்டில் இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் புதிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளைத் தடுக்கத் தவறியதாகக்கூறி அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உள்ளிட்டோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு பின்னர் திரும்பப் பெறப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் செயலரிடம் இருந்து வன்முறைகள் தொடர்பான அறிக்கையின் பிரதி பெறப்பட்டு, தற்போது புதியதொரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம)

# எய்ட்ஸ் நோயாளர் கணிசமாக உயர்வு

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நாட்டில் பதிவான எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை. கடந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமாக அதிகரித்துள்ளது. எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தரவு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு காலாண்டில் பதிவான அதிக நோயாளர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பதிவாகியுள்ளது. அதன்படி இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் புதிதாக 181 எய்ட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த எண்ணிக்கை முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதமும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39 சதவீதமும் அதிகரிப்பாகும். (ச-இ)

**நாளை** 01.09.2023 வெள்ளிக்கிழமை ஆவணி 15

சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம் : 06.05 - 07.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாளில் பட்டப்பகலில்
# 5 வீடுகள் உடைத்து திருடர்கள் கைவரிசை!

சாவகச்சேரி, ஓக. 31

**ஆள்களற்ற ஐந்து வீடுகளில் ஒரேநேரத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காண்பித்து பெருமளவு நகை மற்றும் பணம் என்பவற்றை அபரித்துச் சென்றுள்ளனர்.**

இந்தச் சம்பவம் கைதடி - நுணாவில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பட்டப் பகல் வேளையில் நடந்துள்ளது.

கைதடி - நுணாவிலில் அடுத்தடுத்த வீடுகளில் உரிமையாளர்கள் சந்தை, பாடசாலை என வெளியிடங்களுக்குச் சென்ற வேளையை சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் தமது கை வரிசையைக் காட்டியுள்ளனர்.

வீடுகளின் கதவுகளை கோடரியால் உடைத்து அலுமாரிகளில் வைக்கப் பட்டிருந்த நகைகள், பணங்கள் என்ப வற்றை சூறையாடிச் சென்றுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் சந்தேகத்துக்கிட மான முறையில் திருடர்கள் நடமாடி யதை அவதானித்தபோதும் உரிய நேரத்துக்கு தகவல் வழங்காததால் திருடர்கள் தப்பித்துள்ளனர்.

மக்கள் அக்கறையின்றி செயற்படு வதனாலேயே இவ்வாறான சம்பவங் கள் பதிவாகின்றன.

முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசா ரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-9)





# மீற்றர் இல்லா ஓட்டோ; மீறினால் நடவடிக்கை

### யாழ். மாவட்டச் செயலர் மீளவும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். மாநகரசபை மற்றும் பிரதேசசபை தரிப்பிடங்களிலி ருந்து சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளுக்கு கட் டாயம் மீற்றர் அவசியம். நடைமுறையை மீறுவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டி செயலியில் பதிவுசெய்யப்பட்ட ஓட்டோக் களுக்கு மீற்றர் பொருத்த தேவையில்லை என்ற கருத்து கள் எழுந்துள்ள நிலையில் அதுதொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முச்சக்கர வண்டிகளுக்கு செயலி பொருத்தலாம் பொருத் தாமல் விடலாம். அதைப் பற்றி நாம் அக்கறை செலுத்த மாட்டோம். ஆனால், யாழ். மாநகரசபை மற்றும் பிரதேச சபைகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இடங்களிலிருந்து முச்சக்கர வண்டி சேவைகளில் ஈடுபடுவோர் கட்டாயம் மீற்றர் பொருத்தி பொலிஸ் ஸ்ரிக்கர் ஒட்டப்படவேண்டும். இந்த நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-20)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, ஓக. 31

வடக்கு - கிழக்கில் நீண்டகாலமாகப் பணி யாற்றி வருகின்ற தொண்டர் ஆசிரியர் களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவ தற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சுமார் 60 ஆசிரியர் களும் கிழக்கு மாகாணத்தில் சுமார் 187 ஆசிரியர்களும் நீண்டகாலமாக நிரந்தர நியமனம் இன்றி தொண்டர் ஆசிரியர் களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கே நிரந்தர நியமனங்களை வழங்க அமைச்சரவை இணக்கம் தெரிவித் துள்ளது. (ம-27)

# முதியவரின் வீட்டில் நகை, பணம் திருட்டு


### நல்லூரில் கைவரிசை

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர், சட்டநாதர் கோவிலுக்கு அருகிலுள்ள முதிய வர் வசிக்கும் வீடொன்றில் வெளிநாட்டுப் பணம் உட்பட நகைகள் திருடப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் வேளை இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் உறவினர் வீட்டுக்குச் சென்றி ருந்த தருணத்தில் திருட்டு நிகழ்ந்துள்ளது. வெளி நாட்டுப் பணம், தங்கச்சங்கிலி, தோடு உள்ளிட்ட பெறு மதியான நகைகள் என்பன திருட்டுப் போயுள்ளன என உரிமையாளர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். முறைப்பாட்டுக்கமைய யாழ்ப் பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## யாழ். மாவட்ட
# திராட்சை செய்கையாளர்களுக்கு ரூ. 7 மில்லியனில் செயற்றிட்டம்



யாழ். ஓக. 31

யாழ். மாவட்ட திராட்சை செய்கை யாளர்களுக்கு விவ சாய அமைச்சின் 7 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் திராட்சை செய் கையை ஊக்குவிக் கும் விசேட செயற் றிட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித் தார். யாழ். மாவட்டத்தின் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் பெறுமதியான 165 தூண்கள், பாதுகாப்பு வலை மற்றும் வயர் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதே வேளை - திராட்சை செய்கையாளர்களின் விவரமும் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி2-125)

# வாள்முனையில் பெண் கடத்தல்

### குடத்தனையில் சம்பவம்!

யாழ்ப்பாணம், ஓக. 31

தாயாருடன் வசித்து வந்த மனைவியை தனது சகாக்களுடன் வீடு புகுந்த கணவன் வாள் முனையில் கடத்திச் சென்றுள்ளாரென பருத் தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குடத்தனை கிழக்கு - மாளி கைத்திடல் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை நடந்துள்ளது.

கணவனும் மனைவியும் சில மாதங்களாகப் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள் ளப்படுகின்றன.

இந்த நிலையிலேயே இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கடத்தப்பட்டவரின் தாயாரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள் ளது. பருத்தித்துறை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (ச-100)




## உலக உணவுத் திட்டத்தின்
# உலருணவுகள் விநியோகம் கிளிநொச்சியில் ஆரம்பம்!

கிளிநொச்சி, ஓக. 31

கிளிநொச்சியில் உணவுப் பாது காப்பை உறுதிப்படுத்தும் வகையில் உலக உணவுத் திட்டத்தின் உலரு ணவு விநியோக நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வு கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அலு வலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் திரு மதி றூபவதி கேதீஸ்வரன், உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஜெராட் றொபெல்லோ, உலக உணவுத் திட்ட அரச இணைப்பாளர் முஸ்தபா நியமத் ஆகியோர் அதிதிகளாகப் பங்கேற்று திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தத் திட்டத்துக்காக கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 22 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட் டுள்ளனர்.

இந்தத் திட்டத்தினூடாக இரண்டு மாத காலப்பகுதிக்கான 24 கிலோகிராம் அரிசி, 20 கிலோகிராம் கடலைப் பருப்பு, 5 லீற்றர் தேங்காய் எண்ணெய் ஆகியன வழங்கப்பட வுள்ளன. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் பார்வையாளர்களாவதே பொருத்தம்

## தமிழ் அரசுவின் முக்கியஸ்தர் சரவணபவன் ஆலோசனை



**யாழ்ப்பாணம், ஓக. 31**

**சிங்கள ஆட்சியாளர்கள் யாரும் எங்கள் குரல்களைச் செவிமடுக்கத் தயாரில்லை. போதாததற்கு தமிழ் வாக்குகள் இல்லாமலேயே வெல்லலாம் என்ற வெறி அவர்களுக்கு ஊட்டப்பட்டால் தமிழர்கள் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவரை தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கவேண்டும்?- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன்.**

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது ஜனனதினம் கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் இடம்பெற்றது. இதன் நினைவுப்பேருரையை நிகழ்த்திய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:-

**கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது**

13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையானதும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சூட்டோடு சூட்டாக இந்தியப் பிரதமருக்குச் சொன்னவர் தளபதி அமிர்தலிங்கம். இலங்கை விவகாரத்தில் இந்தியாவைத்தாண்டி எந்தவொரு சக்தியும் தலையீடு செய்ய முடியாது என்ற எண்ணவோட்டம் அன்று இருந்தபோதும், இந்தியப் பிரதமருக்கு அவ்வாறு துணிந்து கடிதம் எழுதினார்.

எமது மக்களுக்கு எது தேவையோ அதனையே நாம் கோரவேண்டும். இன்னொரு தரப்பின் தேவைக்காக எமது நிலைப்பாட்டை - கொள்கையை நாம் விட்டுக்கொடுக்கக்கூடாது. இப்போதும் அந்தக் காலச் சூழல் பொருத்தமானது.

13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்குத் தீர்வுக்காகக் கொண்டுவரப்பட்டது. ஆனால், அது அவர்களுக்குத் தீர்வாக வில்லை என்பதால்தான் இந்த நாட்டில் போர் மூண்டது என்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஹரிணி அமரசூரிய உரையாற்றியிருந்தார்.

**13 தீர்வாகவில்லை**

13ஆவது திருத்தம் தமிழர்களுக்கு தீர்வாகவில்லை என்பதை தமிழர்கள் மாத்திரமல்ல இந்த நாட்டின் ஆட்சியாளர்களும் கடந்த காலத்தில் ஏற்றிருந்தார்கள். அதனால்தான் 1987ஆம் ஆண்டின் பின்னர் மங்கள முனசிங்க அறிக்கை, சந்திரிகா அம்மையாரின் தீர்வுப்பொதி, தற்போதைய ஜனாதிபதி அன்று பிரதமராக இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய 6 சுற்றுப் பேச்சுகள் அதன் ஊடாக சமஷ்டி அதிகாரப் பகிர்வுக்கான இணக்கம், மஹிந்த ராஜபக்ச காலத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சிக்குழுவின் தீர்வுப் பொதி, சில ஆண்டுகளுக்கு முன்னர் நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு என்று அனைத்து முயற்சிகளும் ஏன் எடுக்கப்பட்டன? 13ஆம் திருத்தம் தீர்வு என்றாலோ அல்லது அதனை அடிப்படையாக ஏற்றுக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு முன்னேற முடியும் என்றாலோ இவ்வளவும் ஏன் நடந்தது?

உங்கள் எல்லோருக்கும் குதிரையும் கரட்டும் கதை தெரியும். ஒரு குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டிவிட்டால் அதை நோக்கி குதிரை ஓடிக்கொண்டேயிருக்குமாம். அதற்கு ஒருபோதும் தெரியாது அந்தக் கரட் கிடைக்காது என்று. அதைப் போலத்தான், எங்களுக்கு முன்னாலும் 13ஆம் திருத்தம் என்ற கரட்டைக் கட்டிவிட்டிருக்கின்றார்கள். அதன் பின்னால் நாங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றோம், அது தவறானது. அன்று எங்கள் தளபதி நிராகரித்தமை, 13ஆம் திருத்தத்தில் எதுவுமில்லையென்பதால்தான். அதுஉண்மை. இவ்வளவு காலத்தில் நாம் அதைப் பட்டறிவாகவும் பெற்றிருக்கின்றோம்.

**சமஷ்டியையே கோருவோம்**

ஒரு பேச்சுக்கு சொல்கின்றேன். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திவிட்டால் எங்கள் பிரச்சினை தீர்ந்துவிடுமா? இல்லை. ஆனால், 13 ஆவது திருத்தத்தை சிங்கள அரசாங்கம் தந்துவிட்டால் அதன் பின்னர் அவர்கள் என்ன சொல்வார்கள். சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம். அவர்களுக்கு 13ஆவது திருத்தத்தை வழங்கிவிட்டோம். அதிகாரங்களை வழங்கிவிட்டோம். இதையெல்லாம் சொல்வார்களா? இல்லையா? அதனால்தான் சொல்கின்றோம், ஒன்றுமில்லாத '13'ஐ பற்றி பேசி பேசி காலத்தை இழுத்தடிப்பதை விட சமஷ்டியைக் கோருவோம்.

எல்லோரும் சொல்கின்றார்கள். 13ஆவது திருத்தத்தைப் பெற்று படிப்படியாக முன்னேறலாம் என்று. இந்த 35ஆண்டுகளில் எவ்வளவு படிகள் ஏறியிருக்கின்றீர்கள்? 1987ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 13ஆவது திருத்தத்தின் ஊடாக எவ்வளவு முன்னேறியிருக்கின்றீர்கள்? சரி புலிகள் இருந்தமையால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றால் போர் முடிந்த 14 ஆண்டுகளில் எவ்வளவு முன்னேறியிருக்கின்றீர்கள்? மாறாக பின்னோக்கித்தான் போயிருக்கின்றோம். திவிநெகும சட்டத்தைக் கொண்டு வந்து மாகாண அதிகாரங்களைத் திருடினார்கள். மத்தி தனக்குத் தேவையான ஒவ்வொன்றையும் மாகாணத்திலிருந்து பிடுங்கியிருக்கின்றது. தேசியப் பாடசாலைகள் என்ற பெயரில் மாகாணப் பாடசாலைகள் மத்தி வசமாகியிருக்கின்றது. அப்படியிருக்கையில் ஏன் '13' இன் பின்னால் இன்னமும் அலைந்து கொண்டிருக்கின்றீர்கள்? அதைவிடுங்கள்.

**தேர்தலுக்கு அவர்கள் தயார்**

தென்னிலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க '13'ஐ ஏன் பேசுபொருளாகியிருக்கின்றார்? ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தலின் ஒன்றாகவே அவர் இதனை முன்னிறுத்தியிருக்கின்றார். மீள முடியாத சர்வதேசக் கடன்கள், பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களுக்காகக் கோத்தாபயவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து துரத்திய சிங்கள மக்களும் பிக்குகளும் '13'ஐ பற்றியே இப்போது பேசிக்கொண்டிருக்கின்றனர்.

எதையும் திசைதிருப்பி மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்கித் தமது காரியங்களைக் கனகச்சிதமாகச் செய்து முடிப்பதில் ரணில் மாத்திரமல்ல, சிங்கள ஆட்சியாளர்கள் எல்லோருக்கும் அது கைவந்த கலை. அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக சிங்கள தேசம் தயாராகின்றது. எமது மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்யப்போகின்றார்கள்? எங்கள் அரசியல் தலைவர்களிடம் அது தொடர்பில் ஏதாவது உரையாடல் இருக்கின்றதா? இல்லை. எல்லோரும் சிங்களத்தின் தேர்தலுக்கான ஆயத்தப் படுத்தலுக்கு எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கின்றார்களே தவிர, நாங்கள் என்ன செய்யப்போகின்றோம் என்பது பற்றிச் சிந்திக்கவில்லை.

**ஏன் ஆதரிக்கவேண்டும்?**

கோத்தாபய விரட்டப்பட்டதன் பின்னர் சிங்கள - பௌத்த பேரினவாதம் மீண்டும் எழுச்சியுறாது என்று பலரும் சொல்லியிருந்தார்கள். ஆனால், காலம் அது பொய் என்பதை கண்முன்னே காட்டுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள வேட்பாளர்கள் யாரும் தமிழர்களின் வாக்குகள்தான் தீர்மானமிக்கது என்று நினைத்து அவர்களுடன் பேரம் பேசலுக்குப் போகக்கூடாது என்பதில் சிங்கள - பௌத்த பேரினவாதம் தெளிவாக இருக்கின்றது. அதற்கான நகர்வுகளாகவே, இனவாதத் தீயை மூட்டியிருக்கின்றது

என்னைப் பொறுத்தவரையில் சிங்கள ஆட்சியாளர்கள் யாரும் எங்கள் குரல்களைச் செவிமடுக்கத் தயாரில்லை. போதாததற்கு தமிழ் வாக்குகள் இல்லாமலேயே வெல்லலாம் என்ற வெறி அவர்களுக்கு ஊட்டப்பட்டால் தமிழர்கள் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவரைத் தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கவேண்டும்?

அதேவேளை, ஆட்சியிலிருக்கும் எந்தவொரு ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்தின் உதவியின்றி எதுவும் செய்யமுடியாது என்றால், தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவு செய்யக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்தினால் போதுமே. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளாமல் முடிந்தால் வாக்களிக்காமல் அமைதியாக இருந்து வேடிக்கை பார்த்தாலே போதுமானதாக இருக்கும் - என்றார். (ஒ-இ)

# ஆட்கொல்லி பக்றீரியா கொழும்பில் அடையாளம்

கொழும்பு, ஓக. 21

காலி சிறைச்சாலையில் கைதிகள் சிலரின் திடீர் உயிரிழப்புக்குக் காரணமென உறுதிப்படுத்தப்பட்ட 'மெனிங்கோகோகல்' பக்றீரியாவால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் காய்ச்சல் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவரே பக்றீரியாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பணிபுரியும் இடத்தில் சுமார் 30 பேர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு நுண்ணுயிர் எதிர்ப்பி வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார நிபுணர்களின் தேசிய இயக்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். (ச-இ)

# விரைவுச் சேவை உணவக கற்கைக்கு நேர்முகம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 31

விரைவுச் சேவை உணவகங்களின் வேலைவாய்ப்புக் கற்கைநெறிகளுக்கான நேர்முகத் தேர்வு இன்று காலை 9 மணிக்கு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கற்கைநெறியுடன் தொழிற்றுறை பயிற்சியின் ஊடாக என்.வி.கியூ. மட்டம் 4 இனை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதேவேளை விரைவு சேவை உணவகங்களில் வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணம் இல.12/4 கே.கே.எஸ். வீதியிலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையிலோ அல்லது 021 222 7949, 021 221 1793, 077 7161955 என்ற இலக்கங்களினூடாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்புகள்

- **Accounts Clerk** 3 வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை.
- **Typesetter** (தமிழ், ஆங்கிலம்) 3 வருட அனுபவமுள்ள ஆண்/ பெண்.
- **Sales & Marketing** முன்னனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

K.V. Printers Books Distributing Centre
386, Clock tower road, Jaffna.
075 878 2924, 021 720 0237, 077 878 2924

(CS/26118)AH-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 11 . 1944

மறைவு 28 . 08 . 2023

### திரு. சாம் ஜெயச்சந்திரன் போல்

(ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன மேற்பார்வையாளர், சுவிஷேஷகர்)

யாழ். செட்டித்தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திரு.சாம் ஜெயச்சந்திரன் போல் 28.08.2023 அன்று இயற்கையெய்திவிட்டார்.


அன்னாரின் பூதவுடல் யாழ் White Housc மண்டபத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக் கப்படும்.

தொடர்பு:
**077 436 1710**

தகவல்:
**குடும்பத்தினர்**

(Cs26083)(N 1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 08 . 1943

மறைவு 30 . 08 . 2023

### திரு. புண்ணியமூர்த்தி தனபாலசிங்கம்

பளையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. புண்ணியமூர்த்தி தனபாலசிங்கம் நேற்று (30.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா சிவமணி தம்பதியரின் மருமகனும், கெஜாவல்லியின் அன்புக் கணவரும், அனுஷா, ஜனகன், ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிசுதன், ஜெயதேவி, தயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷிவான், ஷரனி, ஷ்ரேயன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கரத்தினம், சுந்தரம்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற சோமசேகரம், தனலக்சுமி, குலமணி, திலகவதி, தயாவதி, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**76 / 6, ஓட்டுமடம் றோட்,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**021 222 6155**
**077 244 4366**

(cs 51886) (N-1)

## ஆறாவது ஆண்டு நினைவேந்தல்

**31.08.2023**

### அமரர் இ.அருள்நேசன்

(முன்னாள் எழுதுவினைஞர் மக்கள் வங்கி – மன்னார்,
போதகர் கிறிஸ்தவ குடும்பசபை – யாழ்ப்பாணம்)



ஆறாண்டுகளானாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆறாது வேதனையால் தவிக்கின்றோம்
அன்பால் அரவணைத்து ஆறுதலளித்த என்னுயிரே
ஒரு குறையுமில்லாமல் ஒவ்வொரு நாளும் வாழ
- வைத்தவரே
நடு றோட்டில் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்

உறக்கத்திலும் உங்கள் நினைப்புத்தான் எனக்கு
- என்று
எந்நேரமும் சொல்லுவீர்கள் - எங்களை
உறக்கமின்றி தவிக்கவிட்டு தனியாய் சென்றீர்களோ
தாங்க முடியாத் துன்பத்தில் தவிக்கின்றோம்
மீண்டும் எங்களிடத்தில் வந்துவிடுங்கள்...

**மனைவி, மகள், மருமகன்**
**இல. 200, சென் பெனடிக்ற் றோட்,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 . 04 . 1939

மறைவு 01 . 08 . 2023

## அமரர் வடிவேலு விஜயலட்சுமி



முப்பத்தொரு நாட்கள் முழுமையாக கரைந்தன
உங்களின் முகத்தை நாம் பாராமல்
இன்று அதை நினைவுகூரும் நாள்
கடந்த காலத்தை நினைத்து பார்க்கும் நாள்
தேவினி தேவினி என்று தேடிய குரல்
இன்று தேவைகளை முடித்து கொண்டு
தேவலோகம் சென்று விட்டீர்கள்
பாவிகளாக நாங்கள் இன்று
பரிதவித்து நிற்கின்றோம்
அம்மா அம்மம்மா என்று அழைத்தபோதெல்லாம்
எவ்வளவு அன்பை எம் மீது பொழிந்தீர்கள்
இன்று அந்த இடம் வெறுமையாகி கிடக்கின்றது
மண்ணுலகில் எம்மை வாழவைத்த நீங்கள்
விண்ணுலகம் சென்றாலும் எம்முடன் வாழ்ந்து
கொண்டே இருப்பீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(cs.51881) (N.1)

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 04 . 1949

உதிர்வு 28 . 08 . 2023



### திருமதி செல்வராணி பரராஜசிங்கம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி பரராஜசிங்கம் கடந்த (28.08.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் பரராஜசிங்கம் (முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர் குச்சவெளி) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - பரிமளம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுதன் மற்றும் மதன் (கனடா), தரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவரஞ்சினி (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), சௌந்தரப்பிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், லக்சுதன் (மாணவன் - யா/ பரியோவான் கல்லூரி), சச்சிதன் (மாணவன் - ஏஞ்சல் பாடசாலை), ஓவியா (கனடா), இலக்கியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுத்தானந்தன் (லண்டன்), அழகுராணி, காலஞ்சென்ற சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சினி (லண்டன்), காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா மற்றும் பவானிராணி, காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் இரட்ணராஜசிங்கம் (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுலக்சன் (லண்டன்), சுகாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், மதுரா (கனடா), மாதுளா ஆகியோரின் அன்பு பெரிய தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2023) வியாழக்கிழமை ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/51879)AH-1

இலங்கை - 077 086 8650, லண்டன் - 0044 734 1257048,
கனடா - 00164 753 90027, 0014 373 396142

## மரண அறிவித்தல்



நல்லூரம் பதியில்
26.08.1945

நல்லூரான் அடியில்
27.08.2023

### திரு. நாகலிங்கம் சண்முகநாதன் (ராசா)

யாழ்ப்பாணம் மணல்தறை லேன், கந்தர்மடத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகலிங்கம் சண்முகநாதன் அவர்கள் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை ஆவணி திங்கள் வளர்பிறை பத்தாம் பிறைநாளில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அருளானந்தம், இந்திராதேவி, கருணாநிதி, குகதாசன் (பாலா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோதிமலர் அவர்களின் அன்புக் கணவரும் நிஷாந், உஷாந், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாம்பவி, டினுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆத்ரேயா, ஆஞ்ஜெய், ஸ்ரீ ருத்ர ஐயப்பா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல 115, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

சோதிமலர் : +94 77 9078 973
நிஷாந், சாம்பவி : +61 401961 332 , +94 76 2247 459
உஷாந், டினுஷா : +61 424 633 123, +61 421 642 771
வைஷ்ணவி : +94 77 2266 899

(CS 26134) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேருக்கு...

திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கரணவாய் வடமேற்கில் நேற்று நடந்துள்ளது.
வீட்டில் உள்ளவர்கள் நேற்றுத் தேர்த்திருவிழாவுக்குச் சென்றுள்ளனர். வீடு திரும்பிய போது வீடு உடைத்துத் திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. வீட்டில் இருந்த 75 ஆயிரம் ரூபா பணம், பதினொன்றரைப் பவுண் நகைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-26)

### தீர்வுக்கான...

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை கொழும்பில் உள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
தமிழ் மக்களின் தீர்வு விடயம் தொடர்பாகக் கலந்துரையாடும்போது, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் மீதான அழுத்தம் போதாது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை மீறி அரசாங்கம் செயற்படுகின்றது. பொறுப்புக்கூறலைத் தட்டிக்கழிக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை என்பதை இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.
அதை ஏற்றுக்கொண்ட மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ், நாம் அதை உணருகின்றோம் என்று பதிலளித்துள்ளார்.
'இலங்கை அரசாங்கத்தின் மீது ஐ.நா. உறுப்புரிமை நாடுகளே அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். ஆனால் நாம் அனைத்தையும் அவதானிக்கின்றோம். அழுத்தங்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளை நாமும் முன்னெடுப்போம்' என்று மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ் தெரிவித்தார்.
தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புகள், பௌத்தமயமாக்கல் என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மைய காலப்பகுதியில் நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டி இனக்கலவரத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
இந்த விடயத்தை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றோம் என்று மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ் பதிலளித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பாக ஐ.நா. சபை உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-26)

### குறிகாட்டுவானில்....

இறங்குதுறையின் கீழ்ப்பகுதிகள் இரும்பால் வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில், அவை துருப்பிடித்து வலுவிழந்துள்ளதை அடுத்தே கனரக வாகனங்கள் பயணிக்கத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் குறூஸ் இது தொடர்பில் தெரிவித்ததாவது-
இறங்குதுறையின் கீழ்ப்பகுதி வலுவிழந்துள்ளமை பாதுகாப்புத் தரப்பால் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கனரக வாகனங்கள் செல்லும்போது சக்கரங்கள் கீழிறங்கும் ஆபத்துக் காணப்படுகின்றது. பொருள்களை இறங்குதுறைக்குக் கொண்டு செல்லும் பகுதிவரை வாகனத்தில் கொண்டு சென்று, அப்பால் மனிதவளத்தைப் பயன்படுத்தி படகில் பொருள்களை ஏற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். அடுத்தவாரம் கப்பல் கட்டுமானம் தொடர்பான விசேட குழு யாழ். வருகின்றது. அந்தக் குழுவுடன் இணைந்து இறங்குதுறை தொடர்பாக தீர்க்கமான முடிவு எட்டப்படும். அந்தக்குழு நெடுந்தாரகை மற்றும் நயினாதீவுக்கான கடற்பாதைப் படகுச் சேவை தொடர்பாகவும் ஆராயவுள்ளது-என்றார். (அ-எ-125)

### அமெரிக்கா...

பட்டோர் தினம் கடைப்பிடிக்கப்பட்டிருந்த நிலையில், அமெரிக்கத் தூதரம் அதன் உத்தியோகபூர்வ ருவீற்றர் பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது- காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தினமும் தங்கள் உறவுகளை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடி வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஆற்றுப்படுத்தல் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு ஆற்றுப்படுத்தல் அவசியம் - என்றுள்ளது. (எ-6)


## வீடு வாடகைக்குத் தேவை

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் நகர், நல்லூர், கல்வியங்காடு, கொக்குவில் ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**T.P:077 907 6843**



## கண்ணீர் அஞ்சலி



சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகக் கடமையாற்றிய, ஓய்வு பெற்ற கணக்குப் பரிசோதகர் ஏழாலையூர்

**சின்னத்தம்பி கந்தசாமி**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,**
**இல்லப் பிள்ளைகள்,**
**பணியாளர்கள்.**



## ஆதிமயிலிட்டி
## காசிபூதராயர் ஆலய பரிபாலன சபை
## மஹோற்சவம் சம்பந்தமான அறிவித்தல்

ஆதிமயிலிட்டி ஸ்ரீ பூதநாயகி சமேத காசிபூதராயர் ஆலயத்தின் மஹோற்சவம் முதன் முதலாக 200 ஆண்டுகளுக்குப் பின்பு மிகவும் சிறப்பாக சோபகிருது வருடம் **ஆவணி மாதம் 17ஆம் நாள் (03.09.2023) அன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன்** ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாட்கள் பகல் இரவுத் திருவிழாவாக நடைபெறுவதற்கு திருவருள் பாலித்திருக்கிறது.
**19.09.2023 அன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து திருவீதி** உலா நடைபெறும் எனவும்,
**20.09.2023 அன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவம்** நடைபெறும் எனவும் பக்த அடியார்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.
தினமும் மஹோற்ஷவ நாட்களில் பகல் அன்னதானம் வழங்கப்படும்.

**நிர்வாகம்,**
**ஆதிமயிலிட்டி காசி பூதராயர் ஆலயம்.**



## மன்னார் பலநோக்கு கூட்டுறவுசங்க கிளைக் குழு தெரிவுக்கான கிளை பொதுச் சபை கூட்ட அறிவித்தல் - 02.09.2023

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுசங்கம் கிளைக்குழு தெரிவுக்கான கிளை பொதுச் சபைக் கூட்டம் 02.09.2023 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

| தொ. இல | கிளைக் குழு | கிளைக் குழு இலக்கம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | சின்னக்கடை | 01 | தலைமைக் காரியாலயம், மன்னார் |
| 2. | பள்ளிமுனை | 02 | புனித லூசியாமீனவ கூ. சங்க மண்டபம், பள்ளிமுனை |
| 3. | பேசாலை | 03 | மீளெழுச்சிக் கட்டிடம், பேசாலை. |
| 4. | பேசாலை | 03 B | மீளெழுச்சிக் கட்டிடம், பேசாலை |
| 5. | மூர்வீதி | 04 | RDS கட்டிடம், மூர்வீதி. |
| 6. | எருக்கலம்பிட்டி | 05 | RDS கட்டிடம், 05 ம் வட்டாரம். |
| 7. | பனங்கட்டுக்கொட்டு | 06 | மீளெழுச்சிக் கட்டிடம் |
| 8. | தாழ்வுபாடு | 08 | RDS கட்டிடம், தாழ்வுபாடு. |
| 9. | தலைமன்னார் | 09 | பொதுமண்டபம், றிசாட் சிட்டி. |
| 10. | கரிசல் | 10 | RDS கட்டிடம், கரிசில். |
| 11. | புதுக்குடியிருப்பு | 11 | பொது மண்டபம், புதுக்குடியிருப்பு. |
| 12. | தாராபுரம் | 12 | கிராம உத்தியோகத்தர் அலுவலகம், மேற்கு |
| 13. | உப்புக்குளம் | 14 | மீளெழுச்சிக் கட்டிடம், உப்புக்குளம் வடக்கு( GS Office ) |
| 14. | சிறுத்தோப்பு | 19 | RDS கட்டிடம், சிறுத்தோப்பு |
| 15. | சாவற்கட்டு | 22 | RDS கட்டிடம், சாவற்கட்டு. |

அறிவித்தல் கிடைக்காத கிளைக்குழு உறுப்பினர்களும் இதனை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொண்டு கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டுறவு சேவையில்
செயலாளர்
மன் / பல நோக்குக் கூட்டுறவு சங்கம்,
மன்னார்.

(CR 40046) A-1



## மரண அறிவித்தல்

பிறப்பு
09 . 07 . 1953



இறப்பு
30 . 08 . 2023

**வல்லிபுரம் தர்மராசா**

விக்னேஸ்வரா வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தர்மராசா நேற்று (30.08.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பெரியபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், சத்தியானந்த மலரின் அன்புக் கணவரும், துஷ்யந்தினி (ஆசிரியர், யா/ யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்), துஷ்யந்தன் (கண்ணன் களஞ்சியம்- சுன்னாகம்), துஷந்தன் (அதிபர், காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை), வைகுந்தன் (இ.போ.ச. உத்தியோகத்தர் -கோண்டா வில்), சுபாசினி, தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலமுரளி (துபாலகம், சுழிபுரம்), சந்திரவதனி, தாட்சாயினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), பிரசாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நகர சபை, பருத்தித்துறை), லிங்கேஷ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை) ஆகியோரின் மாமனாரும், நிலாஜினி, ஹரிஸ், முகேஷ், டினேஸ், பிரியங்கா, விகாஷ், சாதனா, சாயீசன், டனுஷ், கபிஷ், மதுசிகா, திபுஷன், மதுஷாந், ரேஸ்மி, நவீன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கண்மணி காலஞ்சென்ற வன்னியசிங்கம், ஈஸ்வரி, பாலசிங்கம், இராசமலர், பஞ்சலிங்கம், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2023) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது மகனது இல்லத்தில் (பிரதேச சபை வீதி, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை) நடைபெற்று, தையிட்டி ஆவளை இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**
**077 2247 522, 070 624 8086,**
**077 417 1635**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 26128) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகளை...

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று மன்னாரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

முற்பகல் 10.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட மன்னார் 'சதொச' முன்பாக ஆரம்பமானது. மன்னார் நகரசபை விளையாட்டு மைதானம் வரை பேரணியாகச் சென்ற உறவுகள் தங்கள் கைகளில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் படங்களை, வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிப்பதற்கான மனு ஒன்றை எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கங்களின் தலைவிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அருட்தந்தையர்களிடம் கையளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து பலர் கலந்துகொண்டனர். (அ-எ-60,100,213)

## சர்வதேச...

எம்மிடம் இல்லை.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியாவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

30 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். 40 ஆண்டுகளுக்கும் மேலாக கணிசமான எண்ணிக்கையிலானதமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறுதிப்போரின்போது இலங்கை இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழ்க் குழந்தைகள் தெற்கில் பல இடங்களில் உள்ளனர் என்ற சந்தேகத்தை நாம் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட 10 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று கடந்தவாரம் அதிகாரிகள் எங்களுக்கு அறிவித்திருந்தனர். ஆயினும் அவர்கள் கூறும் அடையாளங்கள், தகவல்கள் எவையும் எங்களிடம் இல்லை. ஆனால் இதன்மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கோ ஓரிடத்தில் உயிரோடு உள்ளார்கள் என்பது உறுதியாகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய உண்மையை சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துவதன் ஊடாகவே வெளிப்படுத்த முடியும்- என்றனர். (அ-எ-110)

## மதப்....

நேற்றுமுன்தினம் கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் அனுநாயக்க தேரர்களை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பௌத்த மதத் தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டுவருகின்றோம். வடக்கில் குருந்தூர் விகாரையின் பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிப்பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என அந்தப் பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அந்தப் பகுதி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ள நிலையில் வெளியிலிருந்து வந்த குழுவினரே முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளனர்.

அது தொடர்பில் வவுனியா மகாநாயக்க தேரருக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம். அதனால் நாம் வெளியிலிருந்து அந்தப் பிரதேசத்துக்குச் செல்வதற்கு எவரையும் அனுமதிப்பதில்லை. அது தொடர்பிலான விடயங்களைக் கண்டறியுமாறு தொல்லியல் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் சட்டத்துக்கு அமைய செயற்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெறும் அகழ்வுகளின் அறிக்கைகளை பெற்றுக்கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுப்போம். முன்னைய அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் அகழ்வுகளைத் துரிதப்படுத்தியது என்று கூறினீர்கள். இருப்பினும் அந்த ஆய்வு முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. தொல்பொருள் திணைக்களம் வழங்கும் தீர்மானத்துக்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்கவும், அந்தப் பகுதிகளைப் பாதுகாக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். பௌத்த தலங்களைப் பாதுகாக்கும் அதேநேரம் முதலில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதிகளில் மற்றைய மதம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் அதுபற்றி ஆராயவும் தயாராக வுள்ளோம் - என்றார். (அ-எ-26)

## சந்நிதியான்...

கூழ சிறப்பாக நடைபெற்றது. வழமையை விடவும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நேற்றைய தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

காவடி எடுத்தல், அடியழித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், கற்பூரச்சட்டி ஏந்துதல் போன்ற நேர்த்திக் கடன்களையும் பெருமளவான பக்தர்கள் நிறைவேற்றினர்.

அதேவேளை, பக்தர் கூட்டத்தைப் பயன்படுத்தித் திருடர்களும் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். பல பக்தர்கள் தங்கள் தங்க நகைகளைப் பறிகொடுத்துவிட்டு அலைந்து திரிந்ததையும் காண முடிந்தது.

நேற்று தேர்த்திருவிழாவில் மட்டும் சுமார் 25பவுண்நகைகள்திருட்டுப்போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. நகைகள் திருடப்பட்டமை தொடர்பாகத் தங்களுக்கு 11 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் நேற்று மாலை தெரிவித்தனர். (அ-எ-26)

## சாவுக்கு...

நிலையில், சிறுமியின் மரணத்தின் பின்னரான நடவடிக்கைகள் உரியவகையில் இடம்பெறவில்லை என விசாரணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாகச் சேர்க்கப்பட்டிருந்த வட்டுக்கோட்டை, முதலி கோயிலடியைச் சேர்ந்த [illegible] தர்மிகா (வயது-16) என்ற சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி மாலை நடந்தது.

### மரணத்தில் சந்தேகம்

சிறுமி சடலமாக மீட்கப்பட்ட வீட்டுக்குச் சென்று இறப்பு விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டார். சிறுமி சடலமாக மீட்கப்பட்டதை அறிந்த சிறுமியின் உறவினர்கள் அந்த வீட்டின் முன்பாகத் திரண்டிருந்ததுடன், சிறுமியின் மரணம் தொடர்பாக சந்தேகங்களையும் எழுப்பியிருந்தனர்.

இறப்பு விசாரணை அதிகாரியின் விசாரணைகளின்போது சிறுமியின் பெற்றோர், உறவினர்கள் சிறுமியின் மரணம் தொடர்பாக சந்தேகம் இருப்பதாகவே தெரிவித்தனர்.

'பேசப்பட்ட சம்பளம் சிறுமிக்கு வழங்கப்படவில்லை, சிறுமி தனது பெற்றோருடன் உரையாடுவதற்கு மாதம் ஒரு முறையே சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தனது வீட்டினருடன் உரையாடும்போது வீட்டுக்கு வரப்போகின்றேன்' என்று சிறுமி பல தடவைகள் கூறியிருந்தார் என்று இறப்பு விசாரணைகளின்போது உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

அங்கு பெற்றோரும், உறவினர்களும் தெரிவித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஆரம்பத்தில் கிளப்பப்பட்டிருந்தது.

### உடற்கூற்று அறிக்கை

சிறுமியின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சிறுமி கொலை செய்யப்பட்டமைக்கான தடயங்கள் இல்லை என்றும், தானே உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்றும் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. அதேவேளை, சிறுமியின் மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிறுமியின் உடல் பெற்றோரிடம் வழங்கப்பட்டதுடன், எரியூட்டவும் அனுமதி வழங்கப்பட்டது. சட்ட மருத்துவ அதிகாரியால் தனக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் சிறுமியின் மரணம் தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்படாததாலும், இறப்பு விசாரணைகளின் அடிப்படையிலும் உடல் எரியூட்ட அனுமதி வழங்கப்பட்டது என்று இறப்பு விசாரணை அதிகாரி தெரிவித்திருந்தார்.

### வாக்குமூலம்

சம்பவம் நடந்து சுமார் ஒரு வாரத்தின் பின்னர் சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாணம் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் வாக்குமூலம் வழங்கியிருந்தனர். சிறுமியின் மரணச் சடங்கு காரணமாகவே இந்தத் தாமதம் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ தினத்தில் சிறுமியின் பெற்றோர் இறப்பு விசாரணையின்போது தெரிவித்தவற்றுக்கு நேரெதிராகவே வாக்குமூலம் இருந்தது என்று பொலிஸ் தரப்புகளில் இருந்து அறியமுடிகின்றது.

### விசாரணைக் குழு

அதேநேரம், சிறுமியின் மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது என்று வெளியான தகவல்களை அடுத்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இந்த விடயம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள ஐவர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை நியமித்திருந்தார். இந்தக் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், அந்த விசாரணைகள் தற்போது முடிவடைந்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், ஆளுநரின் நடவடிக்கைக்காக அனுப்பப்படவுள்ளது என்றும் நம்பகரமாக அறியமுடிகின்றது.

### விசாரணை அறிக்கை

இந்த விசாரணை அறிக்கையில் சிறுமியின் மரணத்தின் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பாக பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. நடைமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படவில்லை என்றும் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் பிரதானமாக, சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையின்படி "இறப்புக்கான காரணம் இன்னமும் புலனாய்வில் உள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கூறியதாக சிறுமியின் உடல் கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி தகனம் செய்யப்பட்டுள்ளது. இது சட்டப் பொறிமுறைகளின் மீது வலிந்த சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடியது என்று விசாரணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதை விசாரிப்பது எதிர்காலத்தில் இவ்வாறான மீள் நிகழ்தலைத் தடுக்கும் என்று அந்த விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தற்கொலை எனத் தீர்மானிக்கப்படின் மத்திய சுகாதார அமைச்சின் FHB/CMM/CS/2022 ஆம் இலக்க 11.08.2023ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட "நடந்தேறிய குழந்தைத் தற்கொலைகள் பற்றிய கள ஆய்வு முறைமை"யை சிறுமி தர்மிகா விடயத்திலும் பின்பற்றி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அறிக்கை பெறப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் விசாரணை அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

16 வயதுச் சிறுமி தங்கி நின்று வேலை செய்தல் தொழில் சட்டத்துக்கு முரணானதாகும். இந்த விடயத்தில் தொழில் திணைக்களமே அதற்கான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்புக்கு அனுப்பப்பட்ட மாதிரிகளின் அறிக்கைகள் கிடைத்த பின்னர், இது ஒரு தற்கொலை எனச் சட்ட மருத்துவ அதிகாரி தீர்மானிக்கும் பட்சத்தில் சிறுமியைத் தற்கொலை செய்யத் தூண்டிய காரணிகள் இருந்துள்ளன என்பது தெளிவாகின்றது. அந்தக் காரணிகளை வீட்டு உரிமையாளர்களே அறிந்திருக்க வாய்ப்புள்ளது. இறுதி இரு மாதங்களாக சிறுமி தனது குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்கவில்லை என்றும் விசாரணை அறிக்கை கூறுகின்றது.

### நடவடிக்கை

இது தொடர்பாக விசாரணைக்குழுவில் அங்கம் வகித்த ஒரு தரப்பிடம் கேட்ட போது, விசாரணை அறிக்கை முழுமை செய்யப்பட்டுள்ள நிலையில், ஓரிரு தினங்களுக்குள் வடக்கு ஆளுநரிடம் அது சேர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கை தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஆளுநர் அலுவலகத் தரப்புகள் தெரிவித்தன. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து விபத்தில் சாரதி உயிரிழப்பு

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனியார் பேருந்தும் அரச பேருந்தும் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 9பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்தில் 44 வயதான சாரதி உயிரிழந்ததுடன், 9 பேர் காயமடைந்த நிலையில் வத்துபிட்டிவல மற்றும் வரக்காபொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஒ-ரி-3)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **33 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
- நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
- செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல். 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு**
- **பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.**

## வேலையாள்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி** ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

- **சமையலாளர்** - யாழ்ப்பாணத்து பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். (சம்பளம் 75,000 தொடக்கம் 100,000 வரை வழங்கப்படும்)
- **சமையல் உதவியாளர்** - (முன் அனுபவம் தேவை)

தொடர்பு: **077 251 4981, 077 872 9806**

*நேரில் சமுகம் தரவேண்டிய முகவரி:*

195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(195, Temple Road. Nallur, Jaffna)

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

**077 266 9605**
**021 225 6707**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.

**காசாளர்** - கணினி தெரிந்தவர்கள் (பெண்கள்)

**பொதி செய்பவர்கள்** - பெண்கள்

தொடர்பு: **077 355 1631**

**T.T.R.Supermarket**
**85,87, Rakka Road, Jaffna.**


## மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 06 - 1934



இறப்பு 30 - 08 - 2023

### திரு. கனகசபாபதி நாகரத்தினம் (இளையாம்பி)
(ஓய்வுபெற்ற பட வரைஞர் (Draughts Man))

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, சித்திரமேழி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகசபாபதி நாகரத்தினம் நேற்று (30.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விக்கிரமசிங்கம், பாலசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்கையற்செல்வம், முருகானந்தன் (கனடா), மோகனச்செல்வம் (லண்டன்), மோகனவிஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் ராஜினி (கனடா), திலகராஜா (லண்டன்), சிவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கம்ஷாயினி, கஜானன், தரஞ்ஜன், தனுஷிகா, கிஷானி, கபிஷா, செந்தூரன், பானுஷா, பிருத்விகா, லிஷாங்கி, அபிரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2023) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாதர்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சித்திரமேழி, இளவாலை.**
**021 221 5914**

(CS/51883)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



**வைஸ்ணவி (சட்டத்தரணி)**

அவர்களின் அன்புத் தந்தை

## நாகலிங்கம் சண்முகநாதன்
## (ராசா)

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.**

மலர்வு **26.08.1945**

உதிர்வு **27.08.2023**

பிரிவால் துயருறும்....

**ஜெயம் றியல் எஸ்ரேட் (பிறைவேட்) லிமிட்டட்**
Jeyam Real Estate (Pvt) Ltd



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org